## பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1–ன் கீழ் மனுதாரர் / எதிர்மனுதாரர் தரப்பு 1ஆவது சாட்சியாக விசாரிக்கப்பட்டு **2026–ஆம்** ஆண்டு **மார்ச்** திங்கள் **06** ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்............................................................... | கிராமம்............................................................. |
| தந்தை/கணவர் பெயர்.......................................... | தாலுக்கா.......................................................... |
| தொழில்.............................................................. | மாவட்டம்......................................................... |

---

# LAOP No. 366/2021
# 06.03.2026

**ம.த.சா.1 – திருமதி. ஆஷா விஜயராகவன், க/பெ. விஜயராகவன்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சென்னை மயிலாப்பூரில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. 17–10–2018 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 6918/2018) சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 26–03–2018 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 1746/2018) சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 27–02–2017 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 750/2017) சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கையகப்படுத்தப்பட்ட நிலம் சென்னை எல்லை சாலை திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திட்டம் பொதுமக்களின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான்நீதிமன்றத்தில் தற்போது தாக்கல் செய்துள்ள 3 ஆவணங்களில் நில எடுப்பு அதிகாரிகளின் விசாரணையில் போது ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு அருகில் வளர்ச்சியடைந்த பகுதிகள் உள்ளன என்பதற்கு GPS புகைப்படம் தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை. பொதுநோக்கத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலம் என்பதால் எனக்கு சரியான இழப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு அதிகபடியான இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.